(4) தமிழ்நாடு 1974-ஆம் ஆண்டு நிலச் சீர்திருத்தங்கள் (நில உச்சவரம்பு கட்டுதல்) இரண்டாம் திருத்தச் சட்ட முன்வடிவு (சட்டப் பேரவை சட்ட முன்வடிவு எண் 14/74.)

THE HON. THIRU S. J. SADIQ PASHA: Mr. Deputy Chairman, Sir, I move—

"That the Tamil Nadu Land Reforms (Fixation of Ceiling on Land) Second Amendment Bill, @ 1974 (L.A. Bill No. 14 of 1974), as passed by the Assembly, be taken into consideration."

Section 23 of the Tamil Nadu Land Reforms (Fixation of Ceiling on Land) Act, 1961 (Tamil Nadu Act 58 of 1961) provides that for the purpose of fixing for the first time the ceiling area of any person holding land on the date of the commencement of the Act in excess of ceiling area, the authorised officer shall not take into consideration any transfer or sub-division effected on or after the notified date and before the date of the publication of the final statement under section 12 or 14. In Kaliaperumal Nattar *v.* the Authorised Officer, Land Reforms, Tiruchirappalli (Writ Appeal No. 159 of 1969), the High Court in appeal has held that the Authorised Officer while acting under section 23 has not been given any power to declare void any sale effected on or after the notified date and before the publication of the final statement under section 12 or 14. The High Court observed that the Government's right to take the land will arise only on the date of publication of the notification under section 18 (1) and that section 23 cannot be read or understood as conferring power upon the authorised officer to take land which has not vested in the Government as provided under section 18 (3) and that the right of the transferee in respect of such land will not be affected. The in terpretation given by the High Court will defeat the object of the legislation. In order to make the intention clear and to prevent persons transferring surplus lands or making sub-divisions after the notified date and before the publication of the notification under sub-section (1) of section 18 and thereby defeating the purpose of the ieiling law, it has been decided to substitute a new section for section 23 declaring void all transfers or sub-divisions effected on or after the notified date and before the publication of a notification under sub-section (1) of section 18 and empowering the authorised officer to calculate the ceiling area of such persons as if no such transfer or sub-division had taken place. The Bill seeks to give effect to the above decision.

@ 45-46 ஆம் பக்கங்களில் இணைப்பு ஆக அச்சிடப்பட்டுள்ளது.

Sir, I commend the motion for the acceptance of the House.

(பிற்பகல் 5-00)

திரு. எஸ். டி. ஆதித்தன் : தலைவரவர்களே, இது உச்சவரம்புச் சட்டத்திற்கு இரண்டாம் திருத்தமாக இந்த ஆண்டிலே வருகின்றது. இன்னும் மூன்றும் திருத்தம் ஒன்றும் வர இருக்கின்றது. இந்த நிலையில் இந்த இரண்டு திருத்தங்களையும் சேர்த்து ஒன்றாகப் பேசும் வாய்ப்பினை தாங்கள் உறுப்பினர்களுக்கு அளித்தால் நன்றாக இருக்கும் என்று தெரிவித்துக்கொள்ளுகிறேன்.

மாண்புமிகு மேலவைத் தலைவர் : அந்த அவையிலிருந்து அனுப்பிய முறையில் இப்போது இதைத்தான் எடுத்துக்கொள்ளலாம். மூன்றாவது திருத்தச் சட்ட முன்வடிவு வரும்போது அதன்மீது பேச விரும்பினால் அப்போது பேசலாம்.

* **திரு. டி. கே. பொன்னுவேலு** : மாண்புமிகு துணைத் தலைவரவர்களே, மாண்புமிகு வருவாய்த் துறை அமைச்சர் அவர்கள் இம் மன்றத்தின் முன்னால் வைத்துள்ள தமிழ் நாடு நிலச் சீர்திருத்தத்தின், தொளாயிரத்து எழுபத்தி நான்காம் ஆண்டின், இரண்டாவது திருத்தச் சட்ட முன்வடிவை நான் வரவேற்கிறேன். நிலச் சீர்திருத்தச் சட்டத்தை ஏமாற்றக்கூடிய முறைகளைத் தடுக்கும் நல்ல நோக்கத்தோடு, ஐகோர்ட்டு தீர்ப்புகளின் விளைவாக திட்டமிட்டு கொண்டு வரப்பட்டுள்ள சட்ட முன்வடிவாகும் இது. உண்மையான நிலச் சீர்திருத்தத்தைக் கொண்டுவரும் நல்லதொரு வாய்க்காலாக இது அமைந்துள்ளது. அந்த முறையில் இதை மனப்பூர்வமாக நான் வரவேற்கிறேன்.

பதினைந்து ஆண்டுக் காலமாக நிலச் சீர்திருத்தச் சட்டங்களை நாம் செய்து கொண்டிருந்தாலும் இப்படிப்பட்ட சட்டங்களைக் கொண்டு வருவதன் மூலமாக சமீபகாலமாக நாம் உண்மையான சோஷலிஸத்தை நோக்கிச் செல்லுகிறோம் என்பதைக் கோடிட்டுக் காட்ட விரும்புகிறேன் நான். நிலம்பற்றிய சீர்திருத்தம் எவ்வளவு இருந்தாலும் அவ்வளவையும் உழவர் பெருமக்கள் வரவேற்றுப் பாராட்டுவதன் மூலம் இந்த நாட்டின் பொருளாதாரத்தை சமப்படுத்தி, சீர் செய்யும் என்று அவர்கள் எண்ணிக்கொண்டிருக்கின்றார்கள். எல்லாம் இயந்திர மயமாக்கப்பட வேண்டும், விவசாயத்திலும் அப்படியே செய்ய வேண்டும் என்ற எண்ணமுடைய இந்த நாளிலே, விஞ்ஞான ரீதியிலே அனைத்தையும் செய்ய வேண்டுமென்று செயல்படும் ருஷ்ய நாட்டிலே கூட விவசாய நிலம் 150 ஏக்கர்

இருந்தால்தான் 'எகனுமிக் வயபிலிடி' இருக்கிறது என்று கூறுகிறார்கள். இந்தியாவிலே உள்ள பெருந்தலைவர்கள் மாண்புமிகு அமைச்சர் திரு. ஜக்ஜீவன் ராம் அவர்கள் இரண்டு ஏக்கர் நிலம் இருந்தால் போதும் என்றும் மாண்புமிகு அமைச்சர் திரு. சி. சுப்பிரமணியம் அவர்கள் ஐந்து ஏக்கர் இருந்தால் போதும் என்றும், ஒருவருக்கொருவர் உன்னைவிட நான் பெரிய சோஷலிஸ வாதி என்று போட்டி மனப்பான்மையில் சோஷலிஸம்பற்றிப் பேசுகின்றார்களே தவிர, இவர்கள் விஞ்ஞான ரீதியில் இதை அணுகுகின்றார்களா என்றால், அச்சப்பட வேண்டிய நிலையில் நாம் இருக்கிறோம்.

கடந்த 27, 28 ஆண்டுகளாக இந்த நாட்டிலே ஒவ்வொரு மாநிலத்திலும் நிலச் சீர்திருத்தம் பற்றித்தான் பேசுகின்றார்கள், செயல்படுகின்றார்களே தவிர மற்ற மற்ற துறைகளிலே சீர்திருத்தம் கொண்டுவரவேண்டியதன் அவசியம் பற்றிப் பேசுகின்றார்களா என்றால், இல்லை என்றுதான் சொல்லவேண்டியிருக்கிறது. இந்த நிலைமை ஏன்?

நகர்ப்புறங்களிலே வீடுகள் வைத்துக்கொள்ளுவதிலே, சொத்துக்களை வைத்துக்கொள்ளுவதிலே ஏதாவது உச்சவரம்பைக் கொண்டுவருவதைப் பற்றி கவனம் செலுத்துகிறார்களா என்றால் இல்லை. எதனால்? என்ன காரணம்? இவைகளிலே உச்சவரம்பை உடனடியாகக் கொண்டுவந்தாக வேண்டும். டாக்டர்கள், எஞ்சினியர்கள், வழக்கறிஞர்கள் இவர்களுடைய வருமானத்திற்கு, வணிகப் பெருமக்கள் வருமானத்திற்கு, வட்டிக்கடை வேந்தர்கள் வருமானத்திற்கு தொழிலதிபர்கள், சினிமாத்துறை வருமானத்திற்கு உச்ச வரம்பு இருக்க வேண்டும். அந்த நிலை உருவானால்தான் உண்மையான சோஷலிஸ சமுதாயத்தை நாம் நிறுவ முடியும் என்று வலியுறுத்திச் சொல்ல ஆசைப்படுகிறேன்.

வெறும் நிலத்தில் மட்டும் சீர்திருத்தம், சீர்திருத்தம் என்று சொல்லிக் கொண்டு போவது நியாயமற்றது, முறைகேடானது என்பதைச் சுட்டிக் காட்டாமல் இருக்க முடியவில்லை. இதைச் சொல்லும்போது நிலம் சம்பந்தமாக சீர்திருத்தம் வேண்டாம் என்று சொல்லவில்லை. ஆனால் நிலம் சம்பந்தமாக மட்டுமே சீர்திருத்தம் என்று சொல்லிக்கொண்டிருப்பதில் நியாயமில்லை என்பதைத் தெளிவுபடுத்தக் கடமைப்பட்டிருக்கிறேன். ஒருவருக்கு எவ்வளவு குறைவாக நிலமிருந்தாலும், அப்படிக் குறைவாக வைத்துக்கொள்ளுவதிலே

1974 ஏப்ரல் 10] **[திரு. டி. கே. பொன்னுவேலு**

தவறு ஏதுமில்லை என்பதை அழுத்தம் திருத்தமாகச் சொல்லக் கடமைப்பட்டிருக்கிறேன். ஆனால் அதே அளவுகோலை வைத்து நகர்ப்புறச் சொத்துக்கள் பற்றியும், வழக்கறிஞர்கள், டாக்டர்கள், எஞ்சினியர்கள் உள்ளிட்ட எல்லாத் துறையினருடைய வருவாய்பற்றியும், நாம் இப்படிப்பட்ட உச்சவரம்பை விதிக்க வேண்டும். இதை முடித்துவிட்டு அதைச் செய்யலாம் என்று சொல்லுவது ஏமாற்று வித்தை என்று நான் சொல்லக் கடமைப்பட்டிருக்கிறேன்.

நாடு சுதந்திரம் பெற்று, 27 ஆண்டுகளிலே நாம் கடந்த 15, 16 ஆண்டுகளாக நிலச் சீர்திருத்தத்திலேயே கவனம் செலுத்திக்கொண்டு வருகிறோம். ஒரு வேளை இன்னும் வரும் 50, 60 ஆண்டுகளுக்கும்கூட இதைப்பற்றியே சொல்லிக் கொண்டு, இதற்குப் பிறகுதான் மற்ற விவகாரங்களிலே சீர்திருத்தம் என்பது நியாயமற்றது என்று குறிப்பிட்டு, இந்தச் சீர்திருத்தம் உண்மையான சீர்திருத்தம் என்று சொல்லி இதை வரவேற்று ஆதரித்து முடிக்கிறேன். நன்றி.

மாண்புமிகு திரு. எஸ். ஜே. சாதிக் பாட்சா : தலைவரவர்களே, திரு. பொன்னுவேலு அவர்கள் இந்தத் திருத்தத்தை ஆதரித்துப் பேசும்போது, தம்முடைய கொள்கைகள்பற்றியும் சிலவற்றைக் குறிப்பிட்டார்கள். இந்தத் திருத்தம் தேவையான திருத்தம், அவசியமான திருத்தம். உயர்நீதி மன்றம் அளித்த ஒரு விளக்கத்திற்குப் பிறகு இந்தத் திருத்தத்தைக் கொண்டுவர வேண்டும் என்று அரசு முடிவு செய்து இந்தத் திருத்தத்தைக் கொண்டு வந்திருக்கிறது. எனவே இதை அனைவரும் ஒருமனதாக ஆதரித்து நிறைவேற்றித் தரவேண்டுமென்று கேட்டுக்கொள்ளுகிறேன்.

மாண்புமிகு மேலவைத் துணைத் தலைவர்: அவை முன் உள்ள பிரச்சினை :

"சட்டப் பேரவையால் நிறைவேற்றப்பட்ட, தமிழ்நாடு, 1974-ஆம் ஆண்டு, நிலச் சீர்திருத்தங்கள் (நில உச்சவரம்பு கட்டுதல்) இரண்டாம் திருத்தச் சட்ட முன்வடிவு (சட்டப்பேரவை சட்ட முன்வடிவு எண் 14/1974) ஆய்விற்கு எடுத்துக்கொள்ளப்பட வேண்டும்."

தீர்மானம், அவையின் முடிவிற்கு விடப்பட்டு, நிறைவேற்றப்பட்டது.

சட்ட முன்வடிவு, பிரிவுவாரியாக, ஆய்விற்கு எடுத்துக்கொள்ளப்பட்டது.

பிரிவுகள் 2 முதல் 5 வரையில், அவையின் முடிவிற்கு விடப்பட்டு, நிறைவேற்றப்பட்டன.

பிரிவு 1, முகப்புரை, நெடுந்தலைப்பு ஆகியவை, அவையின் முடிவிற்கு விடப்பட்டு, நிறைவேற்றப்பட்டன.

மாண்புமிகு திரு. எஸ். ஜே. சாதிக் பாட்சா : தலைவரவர்களே,

"சட்டப் பேரவையால் நிறைவேற்றப்பட்ட, தமிழ் நாடு, 1974-ஆம் ஆண்டு, நிலச் சீர்திருத்தங்கள் (நில உச்ச வரம்பு கட்டுதல்) இரண்டாம் திருத்தச் சட்ட முன்வடிவு (சட்டப் பேரவை சட்ட முன்வடிவு எண் 14/1974) நிறைவேற்றப்படவேண்டும்.

என்று முன்மொழிகிறேன்.

மாண்புமிகு மேலவைத் துணைத் தலைவர் : அவை முன் உள்ள பிரச்சினை :

"சட்டப் பேரவையால் நிறைவேற்றப்பட்ட, தமிழ் நாடு, 1974-ஆம் ஆண்டு, நிலச் சீர்திருத்தங்கள் (நில உச்ச வரம்பு கட்டுதல்) இரண்டாம் திருத்தச் சட்ட முன்வடிவு (சட்டப் பேரவை சட்ட முன்வடிவு எண் 14/1974) நிறைவேற்றப்பட வேண்டும்".

தீர்மானம், அவையின் முடிவிற்கு விடப்பட்டு, நிறைவேற்றப்பட்டது.

(பிற்பகல் 5.06)

மாண்புமிகு மேலவைத் துணைத் தலைவர் : இத்துடன் இன்றைய நிகழ்ச்சிகள் முடிவுற்றன. அவை மீண்டும் நாளை மாலை 4 மணி அளவில் கூடும்.

பின்னர், அவை ஒத்திவைக்கப்பட்டது.

5. அவை முன்வைக்கப்பட்ட ஏடுகள்.

A. Statutory Rules and Orders.

Nil

B. Reports, Notifications and Other Papers.

132. Answer to Unstarred Question Nos. 24 to 27.